உ
சிவகுகமயம்.
திருச்செந்திலாதிபன் துணை.

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS
L4296
(6226)



திருச்சிற்றம்பலம்

வெள்ளிமால் வரைக்கயிலையில் வீற்றிருந்தருளித்
துள்ளுவார் புனல்வேணியார் அருள்செயத்தொழுது
தெள்ளுவாய்மையின் ஆகமத்திறன் எலாந்தெரிய
உள்ளவாறு கேட்டருளினாள் உலகையாளுடையாள்.

திருச்சிற்றம்பலம் — சேக்கிழார்.

வேதநெறி தழைத்தோங்க! — மிகுசைவத்துறை விளங்க!!

திருச்சிற்றம்பலம்

கேவேடர்ஆகிக், கெளிறு-அது படுத்தும்:
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்.
"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"

திருச்சிற்றம்பலம். — ஸ்ரீமாணிக்கவாசகர்.

# சௌரமானமே
# விரதோத்ஸவ காலமாகும்.

---

ஆராய்ந்த சிவாகம பண்டிதர்கள்;

சிவஸ்ரீ சுவர்ணேஸ்வர சிவாச்சாரியர் அவர்கள், கூத்தம்பூண்டி.
,, ஹரிஹரசுப்பிரமணிய பட்டர் அவர்கள் ஜமீன்சிங்கம்பட்டி.
,, சு. முத்துசுவாமி பட்டர், அவர்கள், கரிசூழ்ந்தமங்கலம்.
,, சோமசுந்தர சிவாசாரியர் அவர்கள், இராஜவல்லிபுரம்.

வெளியீடு:

சிவஸ்ரீ. மு. முத்தையா பட்டர் அவர்கள்
ஆசிரியர் சிவாகம பாடசாலை
திருச்செந்தூர்.

1959.

14296
16224

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருச்செந்திலாண்டவன் துணை

# விரதோத்ஸவகால நிர்ணயம்

விநாயக சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, ஸ்கந்தசஷ்டி, விஷயமாய் நிகழும் விளம்பி ஆண்டில், திருவலிவலம், இருதய கமலநாதசுவாமி தேவஸ்தானம் தர்மகர்த்தாக் குழுத்தலைவர் முடிவுரைகளைத் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார்களின் வெளியீடும், அதற்கு மறுப்பாக, 2—8—58ல் திருவாடனை சிவஸ்ரீ ஐயாமணிக் குருக்கள் அவர்கள் அச்சிட்ட விண்ணப்பமும், தருமபுர ஆதினம் வெளியீடு எண். 420 ம் இவ்விரண்டுக்கும் மறுப்பாகவுள்ள 19—9—58ல் திருச்செந்தூர் சிவகாம பாடசாலை ஆசிரியர் சிவஸ்ரீ மு. முத்தையா பட்டரவர்களும் அழகு நாச்சியார் புரம் திருவாளர் சி சுவாமிநாத ஜோதிஷர் அவர்களும் வெளியிட்ட பத்திரிகையும் அச்சுவேலி ஸ்ரீ ச. குமார சுவாமிக்குருக்கள் அவர்கள் விளம்பிஞு புரட்டாசிமீ பத்திரிகையும் இவ்வாண்டில் வெளிவந்துள்ளன.

ஆலயத்தில் நடத்தப்படும் உத்ஸவக் கிரியைகளை செளரமானத்தின்படியே செய்வது உத்தமம்.

செளரமான, சாந்திரமான, வியவகாரத்தில் யாழ்ப்பாணம், மாவிட்டபுரம், வேதாகம சங்கத்தார்களும், தருமபுர ஆதீனத்தில் ஆராய்ந்த பண்டிதர்களும், மற்றும் பத்திரிகைகள் மூலம் முன்பு கண்டனஞ் செய்தோர்களும், இவ்வாண்டிலும் அதற்குத் துணையாய் மறுக்கிறவர்களும், உண்மையில் ஆகமாபிமானத்தோடு தாங்கள் சைவசித்தாந்திகள் என்ற எண்ணத்துடன் இவ்விழாக்களை எந்த முறைப்படி நடத்துவதென்று உண்மையை அறிய வேண்டு

மென்ற நோக்கத்துடனும் ஆராய்ந்திருந்தால் சாந்திரமானத்தில் தான் நடத்த வேண்டுமென்று ஒரே முடிவாக வாதித்திருக்கமாட்டார்கள்.

ராஜஸம், தாமசம், சாத்விகம், எனமூன்று குணங்கள் இருந்தாலும் அவைகளில் மேன்மையாகிய சாத்விகத்தை மட்டிலும் கிருஹித்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவது போல் சௌரம், சாந்திரம், சாவனம், நக்ஷத்திரம், என்ற மாதங்களில் உத்தமமாகிய சௌரமானத்தைக் கொண்டே எல்லாவிதமான உத்ஸவங்களையும் செய்ய வேண்டு மெனச்சிவாகமம் கூறுகிறதை மறுக்க முடியுமா. **வாதுளாகமம்:** திதிப்ரதான தீர்த்தாந்தம் சௌரமாஸோத்த மோத்தமம் மாசர்க்ஷம் பூர்ண சந்த்ரேண ஸம்யுக்தம் பிரதி மாஸகம். **வீரதந்த்ரம்:** பாஸ்கரஸ்ய கதிர்யாவது ராசௌ ராசௌ த்விஷண்முக-தத்ஸ்ரேஷ்ட மிதிக்யாதௌ சௌர மாஸம் ததேவது என்ற ஆகம வாக்கியம் காண்க.

திதியைப் பிரதானமாகக் கொண்ட உத்ஸவத்தை சாந்திரமானத்தாலும், நக்ஷத்திரத்தை பிரதானமாய்க் கொண்ட உத்ஸவத்தை சௌரமானத்தாலுந்தான் நடத்த வேண்டுமென்றும், திதிஉத்ஸவங்கட்கு ஆரம்பமே பிரதானமென்றும், எந்த ஆகமம் விதிக்கிறதென்று ஆராய்ந்து அவ்வாக்கியத்தை வெளிப்படுத்திருத்தல் வேண்டும்.

சூரியன், சந்திரன், இருவர்களையும் ஆலயங்களிலும் யாகம் முதலியவைகளிலும் வழிபடுகிறோம். ஆதலால் இவர்கள் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று நாம் வாதிக்க இடமில்லை. சிவாகமங்களின் படி எதை எப்படி எந்த முறைப்படி அநுஷ்டிக்கக் கூறுகிறதென்று த்வேஷ புத்தியின்றி ஆராய்தலே நலமாகும்.

மஹாளய அமாவாசை கழிந்துதான் நவராத்திரி ஆரம்பம் செய்யவேண்டுமென்றும், தீபாவளி கழிந்துதான் ஸ்கந்தசஸ்டி உத்ஸவ ஆரம்பம் என்றும் கூறுகிறவர்கள் பெரும்பாலும் அதன்படி வரும் என்றும், சில ஆண்டுகளில் மாறும் என்றும், தெரிந்து கொள்ளவேண்டும். இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. ஒரு மாதத்தில் முன் தேதியில் பிறந்த குழந்தைக்குப் பின் தேதியில் ஜன்ம நக்ஷத்திரம் வருவது போலவும், பின் தேதியில்பிறந்தகுழந்தைக்கு முன் தேதியில் ஜன்மநக்ஷத்திரம் வருவது போலவுமாம். முன் தேதியில் பிறந்த குழந்தைக்கு ஜன்மநக்ஷத்திரம் கொண்டாடாமல் பின் தேதியில் பிறந்த குழந்தைக்கு ஜன்மநக்ஷத்திரம் கொண்டாடுதல் பிழை என்றால் யாராவது ஒப்புக்கொள்வார்களா? இதைப்போலவே சிரார்த்த திதியும் வரும். அதையும் பிழையெனக் கூறமுடியுமா? எப்படியும் அந்த மாதமாகவே இருக்குமே தவிர வேறு மாதத்தில் கொண்டாடுதல் பொருத்தமாகாது. அது போலவே இவ்வுத்ஸவங்களும் செய்யலாமா? கூடாதா? என்று ஆராய்ந்திருத்தல் வேண்டும்.

இத்திருநெல்வேலி ஜில்லாவில் ஒவ்வொரு வருஷமும் ஐப்பசி மாதத்தில் சிவன்கோயிலில் திருக்கலியாண உத்ஸவம் கழிந்த பின் தான் தீபாவளியும் அதன் பின் ஸ்கந்த சஷ்டியும், தெய்வானை திருக்கலியாணமும், நடைபெறுவது வழக்கமாக இருக்கிறது. சில ஆண்டுகளில் முருகன் கோயிலில் ஸ்கந்தசஷ்டி, திருக்கலியாண உத்ஸவம் முன்னேயும் சிவன் கோயிலில் திருக்கலியாணம் பின்னேயும் வருகிறதே, அப்படி நடத்துவதை தகப்பனுக்கு கலியாணம் உத்ஸவம் நடத்தாமல், மகனுக்கு கலியாண வைபவம் செய்தல் பிழை என்றால் பஞ்சாங்க கணிதர்கள் என்ன

சொல்லுவார்கள். இவைகள் ஒன்றுக்கொன்று தொடர் புள்ளவை போல் கண்டாலும் அவைகள் நாம் நினைக்கின்ற படி தொடர்பு இல்லாமல் தனித்தனியாய்ப் பிரிந்து இருப் பதை ஆராய வேண்டும்.

மஹாளய அமாவாசை கழிந்த பின்தான் நவராத்திரி யும், தீபாவளி கழிந்த பின்தான் ஸ்கந்தசஷ்டியும் உத்ஸவ மாகக்கொண்டாட வேண்டுமென்ற ஆகமவிதியுளதா?

இரண்டு அமாவாசை வரும் மாதம் குற்றமுள்ளது. பாபசம்பவமானது பிதுர் தேவர்களால் நிந்திக்கப்படுவது எல்லாக்கருமங்களும் விலக்க வேண்டுமென்றால் இம் மாதங்களில் ஆலயங்களிலும் கிருஹங்களிலும் யாதொரு கிரியைகளும் செய்யப்படவில்லையா? அப்படிச் செய்யப் பட்டவைகள் கருமாக்களாக கருதப்படவில்லையா?

(சர்வேஷாம் சிவபக்தாநாம் காரணம். சௌரமாசகம்! வேதாகம விசேஷக்ஞ; சௌரமாசே வ்ருதஞ்ச ரேது! சௌரமாசே வ்ருதவ் குர்யாத் சாந்திரமானே நகாரயேது)

என்று சிவாகமங்கள் கூறுவதால் சிவபக்தர்கள் எல்லோரும் வேத சிவாகமங்களை அறிந்த பெரியோர்களும் விரதத்தை சௌரமானத்தில் அநுஷ்டிக்க வேண்டுமென் றும், சாந்திரமானத்தில் செய்யக் கூடாதென்றும் கூறுகிற சிவாகமவிதி பிழையாமோ?

(பார்ஹஸ்பத்தியஞ்ச விந்தியஞ்ச சம்சர்ப்போ கோளே ஷுசே! மலமாசந்து பாஞ்சாலே இதரேஷு நவித்யதே)

என்ற வாக்கியப்படி நம் நாட்டிலும் உத்ஸவாதி களுக்கும் மலமாத தோஷம் சம்பவிக்குமா?

திருவிளையாடற்புராணம் இரட்டித்த தெரிசஞ் சேர்ந்த மலமதியொழித்து என்று கூறியவை. நான் இவ்வளவு கால எல்லை வரை விரதம் அநுஷ்டித்து உத்யாபனஞ் செய்வதாகச் (சங்கல்ப்பித்துக்கொள்ளும்) தொடக்க நாளைக் குறித்ததா? அல்லது ஒவ்வொரு விரத அனுஷ்டான மத்தியிலும் அதைக்கொள்ள வேண்டுமா? வேத சிவாகம நெறியைக் கடந்து வேறு வழியைப்பின் பற்றுபவர்கள் திடம்பெற்ற உண்மைச் சைவர்களாவார்களா?

சௌரம், சாந்திரம், சாவனம், நக்ஷத்திரம், என மாதங்கள் நான்கு வகைப்படும். அவைகளில் சௌரம் உத்தமம், சாந்திரம் மத்யமம், சாவனம் அதமம், நக்ஷத்திரம் அதமாதமம், என்றும் சாந்திரமான முதலியவைகளில் மேலாகிய சௌரமானத்திலேயே எல்லா உத்ஸவங்களையும் செய்வது உத்தமமென்று எல்லா ஆகமங்களும் கூறுகிற படியால் எங்காவது சௌரமானத்தை நீக்கி சாந்திரமானததில் தான் நடத்த வேண்டுமென்று கூறகிறதா? என்று ஆராய்ந்திருந்தால் மிகநலமாயிருக்கும். சாந்திரமானத்தில் செய்யற்க, சாந்திரமானத்தால் உத்ஸவங்களைச்செய்யில் தோஷமுண்டாம் என்ற வாக்கியங்கள் அநேகம் உள்ளன. சௌரமான விலக்கு வாக்கியங்கள் ஒன்றேனும் உண்டா? **12—8—36 ல் திருநெல்வேலி ஸ்ரீ சி. அய்யாதீக்ஷிதர் அவர்களும். திரு. தில்லைநாயக தேசிகர் அவர்களும் சேர்ந்து வெளியிட்ட பத்திரிகை 5-ம் பக்கத்தில் விரதங்களாவன என்ற தலைப்பில், விரதங்கள் சௌரமானமா? சாந்திரமானமா? என்பதைக் கவனித்தால் ஆகம அபிப்பிராயப்படி சௌரமானந்தான் விசேஷம் என்று தெரிகிறதென்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.** ஆகவே அவர்கள் தம் கொள்கையை நிலை

நாட்டவே தமக்கு அனுசரணையான நியாயங்களை மட்டில் எடுத்துக்கொண்டு மறுத்துவருகிறார்கள்.

இவர்கள் உண்மையில் தாங்கள் சைவ சித்தாந்திகள் எண்ணமுள்ளவராயின் ஆகமங்களில் சொல்லியபடி இவ்வளவு காலமாய் எவ்வளவோ, தெரிவித்துக் கொண்டும், விபூதி தாரண அங்குல அளவுகள் சரியாய்த் தெரிந்து கொண்டு அணிந்து வருகிறார்களா? சமயம், விசேஷம், நிர்வாணம், (ஆச்சார்யா பிஷேகம்) பெற்றும், பூர்வாஅபரக்கிரியைகளில் வேறு மார்க்கமாய்த்தானே சிவாகமத்திற்கு விரோதமாய்ச் செய்து வருகிறார்கள். திருக்கோயில்களில் தேவாரம் ஓதுதலிலும், ஆசீர்வாத விஷயத்திலும், எவ்வளவு விவாதங்கள் நடந்தும் தத்தம் கொள்கைகளை இன்றும் இன்னும் விட்டபாடில்லையே. அவர்கள் பிரமாணமாகக் கொண்ட காரணாகமம் அச்சுப் புத்தகத்திலேயே உத்தர காரணம். 395-ம் பக்கம். 85-வது சுலோகம்

(பக்தஸ்தோத்திரம் படேத்பஸ்சாத் ஆசிஷம் சம்யகாசரேது) என்ற வாக்கியத்தை அவர்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையா? தெரிந்து கொண்டு தானே இன்றும் மறுத்து வருகிறார்கள். பூர்வ காரணம் 205-211 பக்கங்களில் விபூதி தாரணத்தைப்பற்றி கூறியிருக்கிறதே அதையும் அவர்கள் தெரிந்து கொண்டு தானே, தம்பழக்கத்தை மாற்றிக்கொள்ளாமல் மறுக்கிறார்கள். இவர்கள் உண்மையை உணர்ந்து, **கல்பமஞ்சரியிலும் புராணங்களிலும்** சொல்லுகிற **சாந்திரமான விரதங்கள் கருமவாதிகளுக்கென்றும், சிவாகமங்களின்** படிச்செய்யப்படும், **சாகல்யம், பாவனம், சாந்திகம், மாங்கல்யம்** என்னும் நான்கு விதபேத உத்ஸவங்கள் யாவும் **சௌரமானத்தாலேயே செய்வது உத்மம்** என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

வீணுகத்தன்கக்ஷியை நிலைநாட்ட முயற்சிப்பது அதிபாதகச் செய்லாகும்.

இவர்களில் பலர் ஆதிசைவர்களாயிருந்தும் சிவ தீக்ஷைக் கிரமத்தின்படி பிதுர் கார்யாதிகளில் ஸ்கந்த சண்ட கணுதீச அல்லது ஈச, சதாசிவ, சாந்த, ஸ்வரூபமாக பாவிக்காமல் இன்னும் வசு, ருத்திர, ஆதித்திய, ஸ்வரூப மாகக் கொள்வது முறையா? இவர்கள் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் கற்றறிந்த வித்வான்களாயிருந்தால் பச்சாம் பேட்டை. சிவஸ்ரீ சத்யோஜா சிவாசாரியார் அவர்கள் தான் இந்த விரதோத்ஸவத்தை சௌரமானப்படி நடத்தப் பிரசாரம் செய்த மூல புருஷர் என்றும் இவர்களுக்கு முன் இவ்விதி கிடையாதென்றும் நாத்தழும் பேறச்சொல்வார் களா? இவர்கள் பிரமாணமாகக் கொண்ட காரணுகம அச்சுப்புத்தகத்திலே சிவராத்திரி விரதம், திதியைப்பிரதான மாய்க்கொண்டது தானே; அப்படலத்தில் ஏன் சௌரமா னப்படி நடத்த விதிக்கிறது. அதுவும் சாந்திரமானக் கொள்கையுடையாராகிய, மயிலை, அழகப்ப முதலியார் அவர்கள் அச்சிட்ட புத்தகம் தானே அதில் ஏன் இப்படி தவறுதல் நேரிட்டது. என்றும் உண்மையே நிலைக்கும். **1917**-ம் ஆண்டில் ஷெ ஸ்ரீ சத்யோஜாத சிவாசாரியர் அவர் களால் மாத சஞ்சிகையாக வெளியிட்ட புத்தகத்தில் இவ் விஷயமாய் எழுதியபோது, இப்போது மறுத்து வருகிற பெரியார்களும், அவர்களிடம் சந்தா செலுத்தி புத்தகம் வர வழைத்தவர்கள்தானே. அவர்களிடத்தில் அது சமயம் நேரிலோ அல்லது பத்திரிகை மூலமோ கேட்டிருந்தால் அவர்கள் அதற்குத் தகுந்த விடை அளித்திருப்பார்களே? அவர்கள் காலத்தில் கேட்கப்பயந்து (ஒழிந்திருந்து விட்டு) இப்போது அவர்களைக் குறைகூற முற்படுபவர்கள் செயலை

என்ன என்று சொல்வது. உலகத்தில் புத்தமதமும். சமணமதமும், தான் உண்டு. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி களும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் தான் சைவ சமயத்தை உண்டு பண்ணினுர்கள். அதற்கு முன்பு சைவம் என்பது கிடையாது என்று வாதிப்பவர்களை உலகம் எப்படி மதிக்குமோ; அது போலத்தான் ஸ்ரீ சத்தி யோஜாத சுவாசாரியார் அர்வகளுடைய பிரசாரத்துக்கு முன்பு சௌரம், சாந்திரம், முதலியன கிடையாதென்று வாதிப்பவர்களையும் மதிக்க முடியும். ஏனெனில் இவர்கள் பிரமாணமாகக் கொண்ட சைவகால விவேகம் புத்தகம் 80-ம் பக்கத்தில் (சௌரஸ்ரேஷ்ட இஹப்ரோக்தஸ் சாந் திரோ, மத்யமயிஷ்யதே! சாவனஸ்தவ தமப்ரோக்த ஸ்தேன குர்யாந்து நேஷ்யதே!!) என்றும் (சசிமாசஸ்ச சௌரஸ்ச விக்ஞேயௌச விசேஷத: சாந்திரேண வியவ ஹாரார்த்தம் சௌரேண சுபகர்மசு!) என்றும் இருக்கிறதே. இந்நூல் இயற்றியவர் ஸ்ரீ நிகமாகமஞானசிவாசாரியர் இந் நூலுக்குஉரையாசிரியர் ஸ்ரீ கணபதி பட்டர். இவர்களுடைய காலம் எப்போது இவர்களும் ஷை ஸ்ரீ சத்யோஜாத சிவாசாரி யார் அவர்களின் பிரசாரத்தைக்கேட்டுத்தான் செய்தார்களா? வீணுகக்குறை கூறுவதை விட்டு உண்மையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

முன்பு சிவராத்திரி விரதத்தையும் சாந்திரமானத்தின் படி தை மாதத்திலேயே ஆலயங்களிலும் அனுஷ்டிக்க வற் புறுத்தியதை சிலர் அதை உண்மையைத் தெரிந்து கொண்டு மாசியிலேயே செய்ய வேண்டுமென்று பல பிரசங்க மூலமா யும் பத்திரிகை மூலமாயும் பொது ஜனங்களுக்குத் தெரி வித்துக் கொண்டார்கள். அப்போதும் ஒரு சிலர் சாந்திர மானத்தில் செய்வதே நியாயம், சௌரமானத்தில் செய்யக் கூடாது என்று மறுப்புப் பத்திரிகையும் வெளியிட்டுமிருக்

கிறார்கள். ஆனால் திருவருள்த் துணையால் அது அவர்கள் கொள்கைக்கு விரோதமாக நேர்மையான காலத்தில் மாசி யிலேயே நடத்தப்பட்டு வருகிறது. அது போலவே இப்போதும், இதற்கு முன்பும் இவ்விரதோத்ஸவ விஷய மாய்ச் சாந்திரமானத்தாலேயே செய்ய வேண்டுமென்று கூறுவதும், தம்கக்ஷியினர்கள் முன்பு வெளியிட்ட பழைய பத்திரிகையைக் காட்டுவதும் நியாயமாகுமா? நேர்மையைத் தெரிந்து அதன்படி அனுஷ்டிப்பதே முறையாகும்.

இவ்வுத்ஸவங்களுக்கு கவர்ன்மெண்டார் குறிப்பிட்ட லீவு நாட்களில்தான் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டு மென்று வாதிப்பதும் சரியா? கவர்ன்மெண்டு விடுமுறை இல்லாத நாட்களில் மற்றும் உத்ஸவங்களை ஆலயத்தில் நடத்தப்படவில்லையா? சிவாகமானுஷ்டானம் உள்ளவர்களை சௌரமானத்தில் விரதோத்ஸவம் நடத்துவதை மட்டிலும் தடைசெய்து கர்மமே பிரதானமென்று கூறும் கரும வாதிகள் அனுஷ்டிக்க விதித்த விதியின்படி சைவர்களை அனுஷ்டிக்கச் செய்வது நியாயமா?

அமாவாசை உத்ஸவத்தை போதாயன அமாவாசை தினத்தில் செய்யாமல், சிவாகமங்களில் கூறியபடி மறு நாளில் செய்வதுபோல் இவ்விரதோத்ஸவத்தையும் கல்ப சூத்திர அனுஷ்டானமுள்ளவர்கள் சாந்திரமான அனுஷ்டானத்தாலும், ஆலயத்திலும் சிவாகமானுஷ்டானமுள்ளவர் களும் சௌரமானத்தின்படியே நடத்துவது நியாயம் என்று தெரிந்து கொள்வதுடன் மற்றவர்களுக்கும் தெரிவித்தும், நேர்மையான காலத்தில் செய்யச் சொல்லுகிறவர்களை தூஷிக்காமலும் இருக்கவும் வேண்டும்.

## விநாயக சதுர்த்தி

விநாயக் சதுர்த்தியைப்பற்றி கூறிய வாக்கியம் தேர்த் திருவிழாவிற்கே என்றும், விரதத்திற்கு அது பிரமாணமாகா

தென்றும் ஒரு சிலர் கூற முன்வந்துள்ளார்கள். 2—8—58ல் திருவாடானை ஸ்ரீஜயாமணிக்குருக்கள் அவர்கள் வெளியிட்ட விண்ணப்பத்தில் ஒருமாதத்தில் இரண்டு திதி நக்ஷத்திரங்கள் வந்தால் முன்னுள்ளதைத் தள்ளி பின் திதி நக்ஷத்திரங்களிலே தீர்த்தம் அனுஷ்டிக்க வேண்டுமென்றதை மட்டிலும் எழுதியுள்ளார். இதை அனுசரித்தே தருமபுர ஆதீன வெளியீடும் இருக்கிறது. பின் திதி நக்ஷத்திரங்களுக்கு சங்கிரம தோஷம் நேர்ந்தால் முன்னுள்ளதை கிருஹிக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்க மறைத்தது ஏனோ?

(துவஜாரோஹணாதி தீர்த்தாந்தம் ஏகமாசே பிரசஸ்யதே!
த்விமாசே சோத்ஸவம் குர்யாது மத்யமம் பரிகீர்த்திதம்!)

என்ற உத்தரகாரணாகம வாக்கியத்தைத் தெரிந்து இரண்டு மாத சம்பந்தம் ஏற்படலாமென்பதைக்கண்டு கொண்டும் ஒரேமாதத்தில் உத்ஸவ ஆரம்பமுதல் தீர்த்தம்முடிய இருக்க வேண்டுமென்பதை மட்டிலும் காட்டிக் கொள்வது சரியா? அப்படியே எல்லா உத்ஸவங்களும் ஆரம்பமுதல் அவரோஹணம் முடிய ஒரே மாதத்தில் இந்த வாதத்தின்படி எப்பவும் நடத்த முடியுமா? இந்த விளம்பி ஆண்டிலேயே நவராத்திரி உத்ஸவத்தை அவர்கள் கொள்கைப்படி புரட்டாசியில் ஆரம்பித்து, ஐப்பசியில் மஹாநவமி, விஜயதசமியும் ஐப்பசியில் ஆரம்பித்து, கார்த்திகையில் ஸ்கந்த சஷ்டி உத்ஸவமும் வருகிறதே, அப்போது இருமாத சம்பந்தமில்லையா? அதற்கு என் செய்வது. துவஜாரோஹணம், தீர்த்தம், முதலிய நடைபெறுகிற ஆலயங்களில் இவர்கள் எப்படி நடத்தப் போகிறார்கள். இவர்களும் கோயில்பூஜைசெய்பவர்களானே தாம் எடுத்துக் காட்டியது தவறு என்று உணர்ந்து திருந்திக் கொள்வதே நலம். அவர் காட்டிய ஸ்ரீ அகோரசிவாசாரியார் பத்ததி மகோத்ஸவவிதி, தீர்த்த நிர்ணயத்தில் பல ஆகமங்கள் சங்கிரம தோஷத்தில் செய்ய மறுக்கிறதே? ஷை விளம்பி ளு ஆவணி மீ 31 உ சதுர்த்திக்கு சங்கிரம தோஷம் ஏற்படுகிறதே? ஆதலால் ஷை ஆவணிமீ 2உ

**தோஷமில்லாத நாளில் விநாயக சதுர்த்தி விரதம் உத்ஸவங்களைச் செய்வதுதான் சாஸ்திர சம்மதமாகும்.**

ஆலயங்களில் இவ்விநாயக சதுர்த்தி விரதோத்ஸவத்தை சாந்திரமானத்தின்படியேதான் செய்யவேண்டுமென்று எந்த ஆகமமாகிலும் கூறுகிறதா? அந்தப் பிராமாண்ணியத்தை இதுவரை யாரும் வெளிப்படுத்த முன்வர வில்லையே? **சௌரமானத்தின்படி எல்லா உத்ஸவங்களையும் செய்யலாம் என்பதற்கு எத்தனையோ ஆகமப் பிராமணியம் வெளிவந்திருக்கிறதே. இதை முதலில் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.**

சில ஆலயங்களில் இந்த சதுர்த்தியைப் பிரமாதமாய்க் கொண்டு முன் நாட்களைக் கிருஹித்து துவஜாரோஹணத்துடன் தீர்த்தோத்ஸவம் வரை முறையே நடைபெறுகிறது. மேலும் விமலாகமத்தில் விநாயக விரதம் கூறுமிடத்து (அதாதஸ்சம் ப்ரவக்ஷ்யாமி விக்நராஜவ்ருதம் சிருணு வ்ருஷேபாநௌசயன்மாசே சிதேச ப்ருகுவாசரே! கேசரீகத பாநௌச சுக்லபக்ஷே சதுர்த்திகா! சுக்லபக்ஷேச ஸஷ்டீச பாநௌசார்ங்கம்கதேசதி! விநாயகவ்ருதம் பூஜ்ய மேத்திரி விதமுச்யதே)என்று கூறுவதால் **ஆவணிமாத சுக்லபக்ஷ சதுர்த்தியிலேயே சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கக்** கூறுகிறதை அனுசரித்துச் **செய்வதே உத்தமம்,**

## நவராத்திரி

நவராத்திரியைப் பற்றிக் காரணாகமத்தில் **கூறு**கிற "ஆஸ்வயுக்" என்ற பதம் ஆகமவிதிப்படிக்குள்ள பத்ததி இல்லாமல் கல்ப்பரீதியாகச் செய்யும் கர்ம விதிகள் அனுஷ்டிக்கும் விரதத்திற்கேயாம். ஆலயங்களின் வழிபாட்டுக்கு சிவாகமமே இன்றியமையாதது. அச்சிவாகமங்களின் கருத்

துக்கு இணங்கிய கல்பாதிகளும் கூறுகிறதைக்கிருஹித்து நடததுதலும் கூடும். சிவாகமத்துக்குக் கல்பாதிகள் விரோதமாகக் கூறுகிறதை சிவாகமானுஷ்டமுள்ளவர்கள் கைக்கொள்ளத் தக்கதல்ல. ஆதாலால் ஸ்மிருதி புராணங்களில் சாந்திரமானத்தில் செய்யக் கூறியிருப்பினும் ஆகமங்களில் சொல்லுகிறபடி ஆலயங்களில் எல்லா உத்ஸவங்களையும் சௌரமானத்தின்படியே செய்வது உத்தமம் என்றதால் ஆலயங்களுக்கு நவராத்திரியை சௌரமானத்தின்படியே புரட்டாசியில் மஹாநவமி வரும் நாளில் செய்வதே நியாயம். சில ஆலயத்தில் இவ்வுத்ஸவத்திற்கு துவஜாரோஹண முதலிய சமஸ்தக் கிரியைகளும், நடைபெறுகிறது. சில ஆலயத்தில் துவஜாரோஹணம் யாகபூஜை பலிதானமின்றி மற்றக் கிரியைகளும், தீர்த்தம் முதலியனவும் நடைபெறுகிறது. **தீர்த்தோத்ஸவத்திற்கு சௌரமானமே பிரதானம் என்று தருமபுர ஆதீன, 420. எண் வெளியீடு 4ம் பக்கத்திலேஒப்புக்கொள்ளுகிறது** மேலும் சூக்ஷ்மாகமத்தில் (வசந்தே சைத்ரமாசேது வசந்தநவாராத்ரிகம்! கிரீஷ்மேமிதுனேசைவசாவித்ரீஞ்சதத: பரம்! கன்யாமாசேது வர்ஷெளசரஸ்வதீஞ்ச பூஜநம்! சரத்காலே கிருத்திகாயாம் சாரதா நவராத்ரிகம்! ஹேமந்தோ மகரேப்ரோக்தம் த்ரிபு ராத்யா ப்ரபூஜயேது! தபஸ்யாம்சிசிரே சிரோஷ்டம் சியாமளா நவராத்ரிகம்! ஏவஞ்ச ஷட்விதம் ப்ரோக்தம் நவராத்திரிஞ்சபூஜனம்! தத்தன்மாசே சுக்லபக்ஷே நவமியந்தம் ப்ரபூஜயேது !) என்று கூறுவதால் நவராத்திரி ஆறுவிதமென்றும், புரட்டாசிமாத சுக்லபக்ஷ நவமி சரஸ்வதீபூஜை நவராத்திரியென்றும் தெரிவதால் இதை அனுசரித்து அனுஷ்டிப்பது சிலாக்கியமேயாகும்.

நவராத்திரி விஷயமாய்த் தருமபுரம் ஆதீனம். 420 எண் வெளியீட்டின்படி 8நாள் நவராத்ரி உத்ஸவம் நடத்த

ஆகம விதி கிடைக்கவில்லை. அவர்கள் பிரமாணமாகக் கொண்ட பூர்வ காரணுகமும், 9நாள், 7நாள், 5நாள், 3நாள் 1நாள், இந்த விதமாக மஹாநவமியைக் கடைசித்தினமாகக் கொண்டு உத்ஸவத்தை நிர்ணயித்து அனுஷ்டிக்கக் கூறுகிறதே தவிர, 8நாள் நவராத்திரிக்குத் திதியின் விருத்தி க்ஷயம் என்றதால் ஆகமத்தின்படி நவதினத்துவாஜாரோகணுதி என்ற விடத்தில் அஷ்டதின துவாஜாரோகணுதி என்று சொல்ல ஆகமம் இடங்கொடுக்கிறதாஞல் அவர்கள் பெரிய மடத்தின் பீடாதிபதி என்பதற்காக ஆகமவிதியை மாற்றி மடத்தின் பெயர் கொண்டு பத்திரிகை மூலம் வெளிப்படுத்திஞல் அதைக்கைக் கொள்வது தவறேயாகும் பெருங்குளம் செங்கோல் மடம் ஆதினத்தலைவரும், சகலாகமவிற்பனருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுந்தர சத்திய ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சைவர்களுக்குரியது சௌரமானமே. ஆகமங்கள் இங்ஙனமே கட்டளை இடுகின்றன. இது தீர்க்கமாக ஆராய்ந்து கொண்ட முடிபு இதுவே கோயில்களிலும் சைவத்திருமடங்களிலும் கொண்டாட வேண்டிய ஒழுங்கு சைவப் பெருமக்கள் உண்மையறிந்து கடைப்பிடித்து வாழ்வாராக வென்று 8—10—55ல் தமிழ் நாடு பத்திரிகை 3ம் பக்கம் 6ம் பத்தியில் அறிக்கை செய்திருக்கிருர்கள். இவ்விரதோத்ஸவத்திற்கு ஆகமோக்தமாக நடத்துவதே சைவர்களின், சைவ பீடாதிபதிகளின் கடமையாகும். சண்டிகா ஹோமமாகிய சாக்தேய தந்திரத்தை சாக்தேய மதக் கொள்கையுடையோர் செய்வது நியாயமே. சைவர்கள் மேலான சிவகாம விதியின்படி சிவஹா யாகங்களைச் செய்வது அதன் பலஞல் யாவும் பெற விரும்புகின்ற சைவர்களும், பீடாதிபதிகளும், கலியின் வலியால் சாக்தேய தந்திரமாகிய சண்டி

காஹோமம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். சிவகாமத்தில் **நவபூஜாவிதி** அவர்களுக் குகிடைக்கவில்லை போலும்.

ஷை வெளியீடு இவ்விளம்பி ஆண்டில் ஐப்பசி மீ 4உ சரஸ்வதி பூஜை மஹாநவமியும், 5உ விஜயதசமியும் அனுஷ்டிக்கக் கூறுகிறபடி முன்னரேயே முயற்சி செய்து வேண்டியதை பொது ஜனங்களுக்குப் பத்திரிகை மூலம் தெரிவித்திருக்கலாமே. திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கத்தில் ஐப்பசி மீ 5உ சரஸ்வதி பூஜை 6உ விஜயதசமி என்று போட்டிருப்பதை கண்டிக்காதது ஏனோ? அதன்படி நடத்துகிறவர்களை 4உ தான் சரஸ்வதி பூஜை செய்ய வேண்டு மென்றும் 5உ செய்யக்கூடாதென்றும் பிரமாணங்காட்டி அறிக்கை வெளி வந்திருந்தால் நலமாயிருக்குமே? ஸ்மார்த்த பஞ்சாங்கம் எது போட்டாலும் சரியே. சைவ பஞ்சாங்கம் நியாயமான சௌரமானத்தில் இவ்விரதோத்ஸவங்களை அனுஷ்டிக்கச் சொல்வதற்குச் சைவ சித்தாந்திகளை கண்டனம் செய்வது மேலாகுமா? பிழை இருந்தால் பஞ்சாங்கத்தைத் திருத்தி அமைக்க முயற்சிப்பது அவசியமே? நேர்மையை உணர பல ஆகமங்களையும், பல உண்மையான வித்வான்களையும் தெரிந்து நல்ல நோக்கத்துடன் பாரபக்ஷமின்றி பார்த்தல்லவோ நியாயம் கூறத் தகுதி உடையவராவர்.

இப்படியாக மகா நவமியும் சாந்திரமான அனுஷ்டானமுள்ளவர்களுக்கும் ஐப்பசி மீ 4உ, 5உ என்று ஒரு வகையாய்ச் செய்யாமல் உழலுவதை விட **சௌரமானத்தின் படியும், தேவி விரத மாலையாலும், கன்னியா மாதமாகிய புரட்டாசி மீ 5உ நவமியில் செய்வது சிவாகம சாஸ்திர சம்மதமாகுமே? அப்படி செய்வது தான் உத்தமோத்தம்.**

# ஸ்கந்த சஷ்டி

ஸ்கந்த சஷ்டி விஷயமாய் கௌசிகப்ரஸ்ன குமார தந்திர வாக்கியம் என்று திரு. இ. மு. சு. அவர்கள் வெளியிட்டதைக் குமார தந்திர அச்சுப்புத்தகத்தில் அவ்வாக்கியங்கள் இல்லை. என்பதால் அதைத் தள்ளிவிடக்கூடாது. அப்படலமே அப்புத்தகத்தில் இல்லை என்பதற்காக அவ்வுத்ஸவமே நடத்தக்கூடாதென்று கொள்வது. வேறு ஏட்டுப்பிரதிகளைத் தேடிப்பார்க்க வேண்டும். அல்லது வெளிப்படுத்தியவர்கள்தான் இன்ன இடத்தின் பிரதி என்று கண்டிருக்கிறார்களே பின்பு என்ன சந்தேகம். குமார தந்திரம் பூராவுமே அச்சாய் விட்டதா? அது எவ்வளவு கிரந்த சங்கிமையுடையது. எத்தனை ப்ரஸ்னத்துடன் கூடியது என்பதை எல்லாம் யோகிக்க வேண்டாமா? தேவிப்ரஸ்ன குமார தந்திர வாக்கியத்தைத் திருநெல்வேலியில் சிலர் 1—10—36ல் வெளியிட்டிருக்கிறார்கள். ராஜவல்லிபுரம் சிவ ஸ்ரீ சோமசுந்தர சிவாசாரியர் அவர்களிடம் வாமதேவ முனிப்ரஸ்ன குமார தந்திரம் இருக்கிறது. திருச்செந்தூர் ஸ்ரீ ஆலாலசுந்தரர்சிவாசாரிய சங்கத்தில் சனத்குமாரப்ரஸ்ன குமாரதந்திரம் இருப்பதால், இப்படியாகப் பல ப்ரஸ்னங்களையுடையதாக பல பிரதிகள் இருக்கிறதாகத் தெரிய வருகிறது. இவைகளைக் கவனிக்க வேண்டும். சனத்குமார ப்ரஸ்ன குமார தந்திரத்தில்.

(துலா ராசி கதே பானௌதன்மாசே சுக்லபக்ஷகே! ஸஷ்டியந்த முத்ஸவங் கிருத்வா சான்யமாசே நகாரயேது! நவாஹஞ்சரபி சப்தாஹம் ஷஷ்டாஹஞ்ச த்ரியாஹகம்! அதவாதத்தினே வாபிசோத்ஸவஞ்ச சமாசரேது! என்றும்-ஸ்கந்த சஷ்டிதினே பூர்வே ப்ரதமாயாம் சமாரபேது! ப்ரதமாயாம் சமாரபேது! ப்ரதமாயாம் சமாரப்ய ஷஷ்டியந்தம்

பூஜயேத்குஹ! பிரதமாதி ஷஷ்டியந்தம் வாஏகமாசே விசே ஷத:! கன்யா சம்பந்தயோர் பேதா மத்யமம் பரிசீர்த்திதம்! துலாவிருச்சிக சங்கிராந்திம் நகார்யம் விதிருச்சியதே! என் றும்-சமுத்தாய சுகிர்பூத்வாவ்ருத ஏவஷடாநந! வ்ருதஞ்ச த்ரிவிதாநோக சர்வபாப ஹரம்பரம்! துலாரவிசிதே சைவ ஸ்கந்த சஷ்டிவ்ருதஞ்சரேது! கிருத்திக் விரதமன்யேச ப்ருகு வாரம்தத: பரம்! வ்ருதானீத்ரீணியன் மத்யச ரேத்தியாகம மார்க்கத;! தேபுக்தா விபுலா போகான் அந்தே மோக்ஷம் குஹாஞ்யா! என்பதாலும், ஸ்கந்த சஷடி சௌரமானத்தின் ஐப்பசி மாதத்தில் வரும் சுக்லபக்ஷ சஷ்டியிலேயே விரதம் உத்ஸவம் செய்ய விதிக்கிறது, இந்த ஸ்கந்த சஷ்டி உத்ஸ வமும் மற்றும் உத்ஸவங்களைப் போல் துவஜாரோகணத் துடன் 9நாள், 7நாள், 3நாள், 1நாள் இப்படியாகச்சஷ்டியை கடைசித் தினமாய்க் கொண்டு உத்ஸவத்தை நடத்தலா மென்றும் கூறுகிறது. இதன்படி திருநெல்வேலி ஜில்லா வில் திருமலைக்கோயில் துவஜா ரோகணத்துடன் ஐப்பசி சுக்லசஷ்டியைப்பிரதரனமாய்க்கொண்டுநவதினஉத்ஸவம் நடத்துகிறார்கள். இலஞ்சிக் குமாரகோயிலில் துவஜாரோ ஹணத்துடன் ஆறுநாள் உத்ஸவம் நடத்துகிறார்கள். வள்ளியூர்க் கோயிலில் துவஜாரோகணத்துடன் ஸ்கந்த சஸ்டி உத்ஸவதேர்த்தீர்த்தம் முதலியனவும் நடைபெறு கிறது. திருச்செந்தூரில் ஸ்கந்த சஷ்டி உத்ஸவம் முக்கிய மாயிருநதும் சனத்குமார ப்ரஸ்ன குமார தந்திர விதிப்படி யாக பூஜை முதலிய எல்லாக் கிரியைகளும், பக்தஜனர் விருப்பத்தின் பொருட்டு யந்திர பூஜை தாரணங்களும், முறையே நடந்தும், துவஜாரோஹணம் மாத்திரமில்லை. தீர்த்தம் முதலியன முறையே நடைபெறுகிறது. ஓவ் வொரு மாதத்திலும் சுக்ல சஷ்டியில் விசேஷமாய் ஒரு கால பூஜை அதிகமாயிருந்தும் அன்று உத்ஸவம் கொண்

டாட வில்லை. விரைவில் அந்த உத்ஸவத்தையும் நடத்த ஆலய நிர்வாகிகள் முயற்சிக்கவேண்டியது அவசியமாகும். 9 நாள், 7 நாள், 3 நாள், 1 நாள், உத்ஸவங்கள் நடக்கும். ஆலயங்களில், பிரதமை பிரதானம் போய்விடும். 6 நாள் உத்ஸவம் நடத்துகிற ஆலயத்திற்கே பிரதமையில் ஆரம்பித்து நடத்த முடியும். ஆகவே பிரதமை பிரதானமில்லை. சஷ்டியே பிரதானமாகும். பிரதமைப் பிரதானமென்று வாதிப்பவர்கள். ஆறு நாட்கள் கொண்ட விரதம் உத்ஸவங்களுக்கே பொருந்துமென்று யூகித்தும், அதுவே பிரதானமாகாதென்றும், சஷ்டியே பிரதானமென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வாதத்தின்படி இந்த விளம்பிஷூ ஐப்பசிமீ 26உ செவ்வாயன்று அமாவாசை 16 நாழிகை 2. விநாடி. வரை இருக்கிறதே? அன்று ஸ்கந்த சஷ்டி உத்ஸவ ஆரம்பம் குறித்திருக்கிறதே? துவஜா ரோஹணம் முதலியன செய்யப்படும் கோயிலில் காலையே ஆரம்பமான தால், பிரதமையில் ஆரம்பம் செய்வார்களா? அப்படிச் செய்ய முடிந்ததா? என்று தீர்க்க ஆலோசித்து சஷ்டியே பிரதானமென்று முடிவுக்கு வருவதுதான் பொருந்தும். இவ்வுத்ஸவங்கள் ஆரம்ப முதல் சஷ்டி முடியவுள்ள நாட்கள் ஐப்பசியிலேயே இருக்குமாயின், அது உத்தமமென்று, புரட்டாசியில் ஆரம்பித்து ஐப்பசியில் முடியுமாயின் அது மத்தியமமென்றும் ஐப்பசியில் ஆரம்பித்து கார்த்திகையில் முடியும்படி உத்ஸவம் செய்யலாகாது என்றும் கூறுகிறதை அனுசரித்து இவ்வாண்டு ஐப்பசிமீ 1உ நடத்துவதுதான் சாஸ்திர சம்மதமாகும்.

சைவர்கட்கு, வேத, சிவாகம, புராண, இதிகாச, ஸ்மிருதி முதலிய யாவும் பிரமாண நூலாகும். ஆயினும் வேத சிவாகம மிரண்டும் ஆன்ம லாபத்திற்கு முதல் நூலாகும். ஸ்மிருதி கர்ம பிரதிபாத்யமாயும், இந்திரலோகாதி

புவனபதப் பிராப்திக்கே வழி செய்து அக்னியைத் தவிர பரம் வேறென்றில்லை எனச்சாதித்து நிற்றலால் வேத சிவாகமங் கூறும் பரத்வ நிர்ணயத்திற்கும், ஸ்மிருதியிற் கூறும் பரத்வ நிர்ணயத்திற்கும், ஒன்றுக்கொன்று தாரதம் மியப் படுவதால் சைவர்கள் சிவாகமா னுஷ்டானத்தைக் கைக் கொள்வது மேலாகும்.

சைவம் பொது, சிறப்பு என இருவகைப்படும். விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்களைத் தாங்கி சிவபக்தி மானாய் இருப்பவர்கள் யாவரும் சிவதீக்ஷை பெறுவிடினும் பொது வகையில் அவர்களையும் சைவர்களாகவே அங்கீ கரிக்கப்படும். சிறப்பு வகையில் பரிபாக முதிர்ச்சியால், சிவசாக்ஷாத்கார சிவானு பூதிச்செல்வம் பயக்கும். சிவதீக்ஷாதி சத்பாவ முடையாரை விசேஷர்களாகவும், கொள்ளப் படும். இவ்விரண்டில் ஒன்று பொது, மற்றொன்று சிறப்பு மாகும். ஆதலால் இதன்படி ஆலயத்தில் வழிபட்டு விபூதிப் பிரசாதம் வாங்கி அணிந்து கொள்பவர்கள் எல்லோரும் சைவர்களேயாகும். ஆதலால் கர்மவாதிகளானவர்கள் **விரதபலனை சாந்திரமானத்தால் அடைய விரும்புகிற வர்களும்** (வே த ா க ம விசேஷக்ஞே: **சௌரமானே** வ்ருதஞ்சரேது) என்றபடி **வேத சிவாகமா னுஷ்டான விசேஷர்களும் ஆக இவ்விருதிறத்தார்களும் சௌர மானத்தாலேயே விரத பலனைப் பெறலாம். சைவர் கள் சாந்திரமானத்தால் அடைய விரும்புதல் தகுமோ?**

ஆலயங்களில் ஆகமாபிமான மில்லாத ஒரு சிலரின் விதாயகத்தாலும், ஆலய அர்ச்சகர்களாகிய ஆதிசைவர்கள் பெரும்பாலும் அவர்களின் கொள்கையை அனுசரித்து விட்டமையினாலுமே இவ்வித மாறுதல் ஏற்பட்டு விட்டது.

வேதாங்கமாகிய ஜோதிஷத்தைக், கணித. ஆகமம் என்று கூறிப் பொது ஜனங்களை மயங்கச் செய்ய வேண்டாம். ஜோதிஷ சாஸ்திரமென்று தான் பெயர். அதற்கு ஆகமமென்ற பெயர். எக்காலத்திலும். கிடையாது, என்பதை உணர்ந்து கொள்வதுடன். (விரோதாயத்ரத்ருஸ்யதே ஜோதி ஷோக்த ஆகமோத்தயோ! ஜோதி ஷோக்தம் விஹாயைவஹ்யாக மோக்தம் சமாசரேது.) என்றபடி ஆலயங்களில் நடத்தப்படும். விசேஷங்களுக்கு ஆகமங்களில் அந்தந்த விசேஷங்களுக்குரிய படலங்களில் காலங்கள் நிர்ணயம் சொல்லியிருப்பதற்கு ஜோதிஷப்படி விரோதமேற்பட்டால் ஆகமத்தில் சொல்லிய படியே செய்யவேண்டும். என்பதை. ஆலய அர்ச்சகர்களும், பஞ்சாங்க கணிதர்களும் மனதில் வைத்துக்கொண்டு விசேஷங்களை நிர்ணயம் செய்து வெளியிட வேண்டும்.

ஒருசிலர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளைக் கேட்டு அவர்கள் சொல்லுகிற படி செய்து கொள்வது என்று சொல்லுகிறார்கள். அவர்களும் நேர்மையை உரைப்பது நல்லதே. அவர்களும் தமது அனுஷ்டானப்படி சாந்திரமானத்தால் அனுஷ்டிப்பது ஸ்மிருதி தர்மமென்று கூறுவதும் இயற்கை. தாம் பரார்த்த ஆலயத்தில் பூஜை செய்ய விரும்புவது ஆகம விதியின்படித்தாகாது என்று கூறும் ஆகமப் பிரமாணத்தையும்.

பேர் கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர் கொண்ட வேந்தற்குப் பொல்லா வியாதியாம்.
பார் கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமா மென்றே
சீர் கொண்ட நந்தி யெடுத்துரைத் தானே,

என்ற திரு. மந்திரச் செய்யுளையும், அவர்கள் இன்னமும் கைக்கொள்வதாகத் தெரியவில்லையே? இன்னும் சில பீடாதிபதிகள் ஆலய தெரிசனத்தில் இறைவனை வணங்கி அருள்

பெறவந்தும் அருட்பிரசாதமாகிய விபூதியை (அர்ச்சஹஸ்ய ஹரஸ் சாக்ஷாத்) என்றபடி இறைவனுக்குப் பிரதி நிதிய யும் சோகம் பாவனையாலும், சிவஹஸ்த முதலியவைசெய்த கொண்டு மிருக்கிற சத்பாவமுள்ள ஆதிசைவ ஆசாரியர்களி டத்தினின்று பெருமல், அசத்பாவமாகிய தாம்பாளம் முதலி யவற்றினின்றும் தாமே கிரஹித்து அங்கு தாமும் அணிந்து மற்றவர்களுக்கும் வழங்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

(காமிகாகமத்தில்:-) ப்ராமணாதி சாதுர்வர்ண: சர்வே ஷாம் பூதிதானகம்! ஆசார்யேண ப்ரகர்த்தவ்யம் அதவா பியர்ச்சகனேது! என்றும் குடீசஸ்சபகூ ஜ ஸ் ச ஹம்ச: பரமஹம்சக:! சன்யாஸிநாஞ்ச சர்வேஷாம் பூதிதான விதிம் சிருணு! ஆசார்யாபி ஹஸ்தேனு ப்யலாபே சார்ச்சகேனது! விபூதிந்தாபயே சைவ புத்தி முத்தி ப்ரதானகம்! ஆலயேச ஸ்வஹஸ்தேன ஙக்ரஹீதம் கதாசங! மோஹே நாபி க்ருதஞ் சேது ப்ரஜா நாம் நாசனம் பவேது! என்றபடி ஆலயத்தில் விபூதிப் பிரசாதத்தை பக்தர்கள் யாவருக்கும் ஆதி சைவ ஆசாரியர் அல்லது அர்ச்சகம் பூசை செய்பவ ரிடமிருந்தே பெற வேண்டும். குடீச்சர், பகூச்சர் ஹம்சர், பரமஹம்சர், முதலிய சந்நியாசிகளுக்கும், சைவ சந்நியாசிகளுக்கும் ஆதிசைவர்களே விபூதி வழங்கல் வேண்டும். அப்படிப் பெறுவதுதான், புக்தி முக்திகளை உண்டாக்கும். ஆலயத்தில் தனது கரத்தால் ஒருக்காலும் விபூதிப் பிரசாதத்தை எடுத்துக்கொள்ளு தலும், அங்கு வழங்குதலும் கூடாது என்று சிவாகமம் கூறுகிறதையே அவர்கள் கைக்கொள்ளாமலிருக்கும் போ சௌரசாந்திர வியவ காரத்தில் அவர்களிடமிருந்து எப்ப சிவாக்மோத்தமமான நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

## முடிவுரை.

இதில் பொதுமக்களுக்கும் விசேஷமாக ஆதிசைவர்ள் முதலிய வைசவர்களும் ஆலய அறநிலையப்பாது காப்பிலாகா அதிகாரிகளும், தர்ம கர்த்தர்களும், மடாதிபதிகளும் கவர்ன்மெண்டாரும், இவ்வித முறைகேடு ஏற்படா வண்ணம் மேல் ஆண்டுகளிலாவது அந்தந்த சமய சாஸ்திரங்கள் கூறுகிறபடி, நேர்மையான காலத்தில் விரதோத்ஸ்வங்களை அனுஷ்டிக்கமுயற்சிக்க வேண்டும். **பஞ்சாங்க கணிதர்களும் சௌரமானத்திலேயே இவ்விரதோத்ஸவத்தைக் குறிப்பிடவேண்டும்.** அல்லது இது ஆலய விரதோத்ஸவம் என்றுவது குறிப்பிடல் வேண்டும். **ஆவணி மாதத்தில் வரும் சுக்லபக்ஷ சதுர்த்தியே விநாயக சதுர்த்தி. புரட்டாசி மாத சுக்ல நவமியே ம்ஹாவநமி, ஐப்பசி மாத சுக்ல சஷ்டியே ஸ்கந்த சஷ்டி, ஸ்கந்த சஷ்டியாகும்.** இவைகளைத் தெரிந்து விரதம் உத்ஸவங்களை அநுஷ்ட்டித்து எல்லா நலன்களையும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்.**

*கொய்தபன்மலர்க் கம்பைமாநதியில் குலவுமஞ்சனம் நிலவுமெய்ப்பூச்சு*
*செய்நருங்கொழுந் தீபதூபங்கள் நிறைந்தசிந்தையில் நீடிய அன்பின்*
*மெய்தரும்படி வேண்டினஎல்லாம் வேண்டும்போதினில் உதவமெய்ப்பூசை*
*எய்தஆகமவிதி எலாம்செய்தாள் உயிர்களியாவையும் ஈன்றஎம்பிராட்டி*

**திருச்சிற்றம்பலம்.** சேக்கிழார்

*மன்னுமாமலை மகேந்திரமதனில்—சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்*
**ஸ்ரீமாணிக்கவாசகர்.**

*மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம்*

**திருச்சிற்றம்பலம்! திருச்சிற்றம்பலம்!!**
**திருச்சிற்றம்பலம்!!!**

---

*பிழைத்திருத்தம்:-* பக்கம் 1-ல் 18-வது வரியில் சாவமிக் குருக்கள் என்பதை சுவாமிக் குருக்கள் என்று திருத்தி வாசிக்கவும்.

14296
(6226)

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR :: MADRAS 41

முருகன்
பிரஸ்
திருநெல்வேலி